திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, நான் கேட்க வேண்டிய கேள்வியை திரு. உமாநாத் அவர்கள் கேட்டு விட்டார்கள். அடுத்த கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். இறந்த அந்த 15 குடும்பங்களுக்கு ஏதாவது நிதி உதவி அளிக்கப் பட்டதா? இல்லையென்றால், இனிமேல் நிதி உதவி அளிக்கப் படுமா?

திரு, இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவை செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்பு தற்போது எதுவும் இல்லை.

கால்நடைகள் மருத்துவத்திற்கான கட்டணம்.

வினா 59—திரு. நா. பழனிவேல் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) கால்நடை மருத்துவ மனைகளில் (Key Village Centres) வைத்தியத்துக்கு வரும் மாடுகளுக்கு ஊசிக்கு ரூ. 2 வசூலிப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதை நிறுத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :

(அ) வைத்தியத்துக்கு வரும் மாடுகளுக்கு ஊசிக்கு ரூ. 2 வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவர்கள் மாடுகளுக்கு அங்கே ஊசி போடக்கூடிய டாக்டர்கள் ரசீது கொடுத்து இரண்டு ரூபாய் வசூல் செய்கிறார்கள். சில இடங்களில் ரசீது கொடுக்காமல் வசூல் செய்கிறார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் அப்படி இல்லை என்று சொல்வது வியப்பாக இருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக ஒரு விசாரணை செய்யக்கூடிய முறையில் தனி அதிகாரிகளை நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையில் அப்படிப்பட்ட புகார்கள் என் கவனத்திற்கு வருமேயானால், நிச்சயமாக அதிகாரிகளை நியமித்து விசாரணை செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

1979 அக்டோபர் 31]

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பிற்கு அரசு ஏதேனும் செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறதா? வறட்சிப் பாங்கானதை வளமாக்க அரசிடம் ஏதாவது செயல் திட்டம் இருக்கின்றதா? அதை விளக்க முடியுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டமும், ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான வருமானத்தை அளித்தல், சுற்றுப்புற பகுதிகளில் தரம்வாய்ந்த கால்நடைச் செல்வத்தைப் பெருக்குதல் ஆகிய இவ்விரண்டும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இந்த முறையில் 1978–79ஆம் ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் 400 ஆட்டினப் பிரிவுகளைத் தனிப்பட்டவர்க்கும், 200 ஆட்டினப் பிரிவுகளைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகிக்க இருக்கிறார்கள். மேலும், ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், தர்மபுரி மாவட்டத்தில் 1978–79 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ.24,13,000 ஆகும்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாங்கள் எல்லோரையும் விதிமுறைகள்படி நடத்துகிறீர்கள். இது எப்படி துணைக் கேள்வியாகும் என்பது தெரிய வேண்டும். இது துணைக் கேள்வியாக இல்லை. எனவே, இதைச் சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்பிலே இருந்து எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால், மற்ற உறுப்பினர்களும் இதுபோன்ற கேள்வியைத் துணைக் கேள்வியாகக் கேட்பார்கள். அதையும் தாங்கள் அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுப்படையாக கால்நடை மருத்துவ மனைகள் தமிழ்நாட்டிலே எந்த அளவில் இருக்கின்றது என்பதைப் பற்றியது. இதில், குறிப்பிட்ட மாவட்டத்தைப் பற்றிக் கேட்டு, அதற்கான பதில் தயாராக இருப்பதுபோல் நிலைமையை உருவாக்குகிறது. ஆகவே, தயவு செய்து கேள்வியின் மொத்த விவரத்தைப் பற்றிச் சொல்லலாமே தவிர, குறிப்பிட்ட மாவட்டத்தைப் பற்றி விவரம் அளிப்பது போன்ற நிலைமையை உண்டாக்கக் கூடாது. அது இனிமேல் ஏற்படாமல் தவிர்க்க வேண்டுமென்று அமைச்சர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. சுப்பு : தலைவர் அவர்களே,.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டாம், உட்காருங்கள். மணி என்ன ஆகிறது பாருங்கள். கேள்வி எண் 60.